ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

உசிதகாலத்தில் உத்தமகுலத்தில் உயர்ந்தகுணமுள்ள தர்மபத்னியை விவாஹம் செய்துகொண்டவன் கிரஹஸ்தாச்ரமி எனப்படுவான். பிரும்மசர்யாச்ரமத்தில் வேதவித்யா விருத்தாதிகளால் ருஷிகளது கடனிலிருந்து விடுபட்டு இந்த கிரஹஸ்தாச்ரமத்தில் தேவர்களது கடனையும் பிதிருக்களது கடனையும் தீர்க்கவேண்டும். ஆகவே ரிஷிகள், தேவர்கள் பிதிருக்கள் இவர்களுடைய ஸம்பந்தம் கர்மபூமியில் ஜனித்த எல்லா த்விஜர்களுக்கும் இருக்கின்றது. அதனால் தேவாதிகளும் இவ்வாச்ரமத்தார்களிடமிருந்து தம் தம் கடனை தீர்த்துக்கொள்ள அவர்களுக்கு வேண்டிய உதவிகளை பரோக்ஷமாய் செய்துகொடுக்கிறார்கள். ஆகவே அவர்கள் அந்தக் கடனைத் தீர்க்கவேண்டிய காரியங்களில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்று சாஸ்திரம் கூறுவதிலிருந்து ஒவ்வொரு ஸனாதனதர்மியும் மற்றவர்களைப்போல் இவ்வுலக வியாபாரத்தோடேயே நின்றுவிடுவதோ, அல்லது அதையே பிரதானமாக கவனிப்பதோ கூடாதென்று தெரிகிறது. அன்றியும் எல்லா ஆசிரமங்களைவிட சிறந்ததாகப் புகழப்படும் கிரஹஸ்தாச்ரமத்திலிருப்பவன் தனது ஸ்வதர்மத்திலிருந்து ஒரு பொழுதும் விலகக்கூடாதென்று ஏற்படுகின்றது. அதற்காக விவாஹம் செய்துகொண்ட நாள் முதல் அக்னி உபாஸ்திமுதலிய காரியங்களை விடாமல் செய்யவேண்டும். அதிக சக்தியும் தனதான்யாதி ஸம்பத்தும், ஸாத்விக சிரத்தையுமிருந்தால் சிரௌதாக்னியை ஆதானம் செய்துகொண்டு ஆராதித்துவரவேண்டியது, அவையெல்லாவற்றையும் சேர்த்து 21-ஸம்ஸ்தை என்பார்கள். அதாவது 7-பாகயக்ஞஸம்ஸ்தைகள், 7-ஹவிர்யக்ஞஸம்ஸ்தைகள், 7-ஸோமஸம்ஸ்தைகளாம். இக்கலியில் இவைகளையெல்லாம் அனுஷ்டிப்பவரைக் காண்பது அரிதாயிருக்கின்றதாயினும் சில மஹான்களாவது அனுஷ்டித்து வருவதைக்கண்டு ஸந்தோஷிக்கவேண்டியது. ஆனால் தற்காலத்தில் சிலர் அஹிம்ஸா தர்மத்தைப் பெரிதாக பாராட்டுவதுபோல் நடித்துக்கொண்டு யாககர்மாவில் பசுஹிம்ஸை நேருவதால் அது சுத்தமில்லை என்று நினைப்பதோடில்லாமல் துண்டுப்பிரசுரம் மூலமாயும் பிரசாரம்செய்து வருகிறார்கள். இந்த விவாதம் இப்பொழுதுமாத்திரம் புதிதாய்க் கிளம்பிவிட்டதெனக் கூறுவதற்கில்லை. ஸாங்கியமதஸ்தர்களே இந்தக் கக்ஷியை கிளப்பிவிட்டிருக்கிறார்கள். அவர்கள் கூறியிருப்பதுபோலத் தற்காலத்தியவர்களுக்குக் கக்ஷிசொல்லத்தெரியாது. அவ்வளவு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதெல்லாம் மீமாம்ஸகர்களால் பலவாறாகக்கண்டிக்கப்பட்டு நிலைபெறாமல் போய்விட்டது. அந்த வாதத்தில் சிதரிப்போன இரண்டொரு ஆபாஸயுக்திகளை எங்கிருந்தோ தெரிந்துகொண்டு ஞானபலமற்றவர்களிடம் போதனை செய்கிறார்கள். அதில் அகப்படாமல் யாவரும் ஆர்யதர்மத்தையே ஆதரித்து ஆயுராரோக்யாதி அபீஷ்டபலனை பெறுவாராக.

சுபம்!

பத்திராதிபர்.

௨

# ஆர்ய தர்மம்.

சுக்ல-ஹூ பங்குனி-மீ ௧௪௨

## அஹிம்ஸா.

அஹிம்ஸாதர்மம் மிகச்சிறந்ததாக யாவராலும் கொண்டாடப்படுகின்றது. ஆயினும் அதன் ஸ்வரூபத்தையும் உண்மையையும் உள்ளபடி தெரிந்துகொண்டவர்கள் மிகக்குறைவாயிருப்பார்கள். ஏனெனில் காமம், க்ரோதம், பசி, தாஹம் முதலிய நித்ய சத்ருக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அவைகளின் வேகத்தைத் தணிக்கவேண்டியதற்காகச் செய்யும் வேலையாகிய விஷயோபயோகம், எந்தப் பிராணிக்காவது எக்காலத்திலாவது எவ்விதத்திலாவது ஏதாவதொரு உபஹதியை (கெடுதலை)ச் செய்யாமல் ஸம்பவிக்காது. அங்ஙனமே பஞ்சசிகாசாரியார்— **"नानुपहत्य भूतान्युपभोगस्संभवति"** "பிராணிகளுக்கு உபஹதியை உண்டுபண்ணாமல்விஷயோபபோகம் ஸம்பவிக்காது" என்று அனுபவத்திலுள்ளதைக் கூறுகின்றார். அப்படி இருக்கையில் ஹிம்ஸை செய்யாமல் அஹிம்ஸா தர்மத்தை ஆச்ரயிக்க எவரால் முடியும். பொதுவாக ஹிம்ஸை கூடாதென்றிருந்தாலும் சில விஷயங்களில் அது ஹிம்ஸையாகாது என்று வைத்துக்கொள்வோமானால், நம் முன்னோர்கள் ஹிம்ஸாவிஷயத்தில் விரிவாக விசாரம் செய்து வியவஸ்தை செய்திருப்பதை அப்படியே அங்கீகரிக்கத்தான் வேண்டும். சில விஷயத்தில் ஹிம்ஸை ஹிம்ஸையாகாது என்று நாமாக வைத்துக்கொள்வதைவிட முன்னோர் வியவஸ்தை செய்திருப்பதை அனுஸரிப்பதே நன்றாகும். முன்னோர்களோ யாகாதிகளில் நேரும் பசு ஹிம்ஸாதிகள் ஹிம்ஸையே அல்ல என்று நியாயபூர்வகமாக நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். பசு, பக்ஷி முதலிய திர்யக்பிராணிகளும், மனிதர்களும் தங்களது பசிதாஹத்தை விலக்க ஸ்தாவரப் பிராணியை ஹிம்ஸிக்கிறார்கள். அதிக பலமுள்ள "பசு பக்ஷி முதலிய திர்யக்பிராணிகள் அற்ப பல

மூள்ளவைகளை தின்றுவருவது பிரஸித்தம். அதுபோலவே மனிதர்களையும் புலி காடி முதலிய துஷ்டமிருகங்கள் தின்றுவிடுகின்றன. மனிதர்களுக்கு அவைகளைப்போல் சரீரபலமில்லாவிடினும் புத்திபலத்தால் அவைகளிடம் அகப்படாமலிருப்பதோடல்லாமல் அவைகளையும் அடக்கி தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டு வேலையும் செய்விக்கின்றார்கள். ஸர்க்கஸ் பார்த்திருப்பவர்களுக்கு இதை அபூர்வமாகச் சொல்லவேண்டியதில்லை. இதற்காகவே தான் க்ஷத்திரியர்களுக்கு வேட்டையாடி துஷ்டமிருகங்களைக் கொல்வது பெரிய தர்மமென்று தர்மாதர்மத்தைய றிந்த தார்மிகர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அதுபோலவே யாகாதிகர்மங்களிலும் செய்யப்படும் பசுவதம் வதமேயல்லவென்று மனு நன்றாய் வாய் விட்டுச் சொல்லியிருக்கிறார். அன்றியும் பசுக்களின் ஸிருஷ்டியே யாகாதிகார்யங்களுக்காகவாமென்று ஸ்மிருதிகளில் வெளிப்படை. யாகாதி கார்யங்களுக்காகவென்று ஸிருஷ்டிக்கப்பட்ட பசுக்கள் அந்த யாகங்களிலும் உபயோகப்படுத்தப்படாமல் போய்விடுமானால் அவைகளின் ஸிருஷ்டியே வீணாகவல்லவா ஆய்விடும். ஸர்வக்ஞனாகிய பரமேசுவரனது ஸிருஷ்டியிலகப்பட்ட ஒவ்வொரு பிராணியும் எதற்காக ஸிருஷ்டிக்கப்பட்டதோ அந்த கார்யங்களுக்காக உபயோகப்பட்டாற்றான் ஸிருஷ்டித்தவரது ஸர்வக்ஞத்தன்மை நிலைக்கும். இந்த மாற்றுவதற்காக எவரேனும் உபன்யாஸாதிகளால் தன் சக்தியை வெளியிடுவார்களானால், அதை ஸிருஷ்டி கர்த்தா ஸஹிக்கமாட்டார். தனது ஸர்வக்ஞத்வ சக்தியைக் குறைக்க நினைத்தவரின் சக்தியைக் குலைக்க அவர் ஸங்கல்பம் செய்துவிடுவார். ஸத்யஸங்கல்பரானதால் அதுநிறைவேறுமேயல்லாது அதார்மிகளது அதர்மப்பிரசாரம் நீடித்திருக்கமாட்டாது. ஆகையால் அஹிம்ஸையின் தத்துவத்தை சரிவரத் தெரிந்து கொண்டு தார்மிகமான யாகாதிகளை யாவரும் அதிகாரத்திற்குத் தக்கவாறு அனுஷ்டித்து அதுவே அஹிம்ஸாதர்மமெனக்கொண்டாடி க்ஷேமத்தையடைவார்களாக.

பத்திராதிபர்.

---

# அஹிம்ஸாதர்மத்தின் மேன்மை.

இப்பெயருடன் 18—3—30ல் மித்திரனில் ஓர் வியாஸம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. 14—3—30 வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு மதுரையில் இருக்கும் ராமேசுவரம் தேவஸ்தானம் காலேஜில் அக்கலாசாலையின் ஸத்ஸபையில் அப்பாடசாலை வ்யாகரண தலைமைஉபாத்தியாயர் பிரும்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்திசாஸ்திரிகளால் அது உபன்யஸிக்கப்பட்டதாம். மதுரை பிரபல வக்கீல்களும் ஆஸ்திகஜனங்களும் வந்திருந்தனராம். அப்போது சாஸ்திரிகளின் உபந்யாஸ ஸாராம்சம் மித்திரனில் கூறப்பட்டதாய்க் காண்கிறது. இச்சாராம்சத்தைச் சற்று ஆராய இறங்குவாம்.

சாஸ்திரிகள் உபன்யாஸம் என்றால் அதிலும் வியாகரண தலைமை உபாத்தியாயரென்றுகும்போது அவர் உபந்யாஸம் சாஸ்திரங்களின் ஸாரமாகத்தானிருக்குமென்று சுலபமாய் யாவரும் ஊகிக்கலாம், ஆனால் அவ்விதம் எதிர்பார்த்தபடி இல்லாமல் முதலில் சாஸ்திரிகளைப்பற்றி வேறுவிதத்திலும் ஆச்சரியப்படும்படி காண்கிறது. அவரது உபந்யாஸத்திற்கு முதற்பிரமாணம் திருக்குறள்தான். இதனால் சாஸ்திரிகளுக்கு ஸம்ஸ்கிருதத்திற்போல் தமிழிலும் பாண்டித்தியம் அதிகமென்பது வெளியாயிற்று. இதற்காகவே சாஸ்திரிகள் குறளையே மேற்கோளாய் அதிகமாய்க் காட்டினரோவென்றும் நினைக்கலாம். இருக்கட்டும் ஸாரத்தைக் கவனிப்போம்.

சாஸ்திரிகள் அஹிம்ஸை என்ற விஷயத்திற்கு ஆரம்பம் பிரமாணவாயிலாய் நன்கு நிரூபிக்கிறார். இவர் அஹிம்ஸா தர்மத்தின் தத்வத்தைச் சொல்வதே தன் முக்கிய பிரயோஜனமென்றும் குறளில் பாண்டித்தியத்தைக்காட்டவேண்டுமென்றுமிருந்தால் அதை மட்டிலும் வெகு அழகாய் உபந்யஸித்திருக்கலாம். அவ்விதமில்லாமல் ஸர்வபரிசுத்தமாயும் பிராம்மண்யத்திற்கு முக்கிய அங்கமாயும் கௌதமர் பிராமணருக்குக் கூறிய 48 ஸம்ஸ்காரங்களுள் இன்றியமையாததாயும் வேதத்தின்பூர்வகாண்டத்தால் ஸம்பூர்ணமாய்ப்புகழ்ப்பெற்றதாயும் ஸமஸ்த ஸ்மிருதிகர்த்தாக்களான மஹரிஷிசிரேஷ்டர்களால் கொண்டாடப்பெற்றதாயும் ஸமஸ்தசிஷ்டர்களால் நிஷ்களங்கமாய் அனுஷ்டிக்கப்பெற்றதாயுமிருக்கிற வைதிக கர்மமான யாகத்தை மிகக்கேவலமாய் நிந்தித்திருக்கவேண்டாம். பண்டிதரென்ற இவர் இவ்விதம் நிந்திப்பதைப் பார்த்தால் இதை

உத்தேசித்தே இவரது பிரவர்த்தியோவென்றும் எண்ண நேரிடுகிறது. இதற்காகவே உலகறிய இதை சிரமத்துடன் எழுதி மித்திரனில் பிரசுரித்தாரோ யாதோ. எவ்விதமாயினுமாகுக. இனி இவரது வசனங்களைக் கூறி அல்பமான ஸமாதானத்தால் முடித்துவிடுகிறேன்.

சாஸ்திரியார் கூறுவது இது. "கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாள்மேல் செல்லாதுயிருண்ணும் கூற்று" என்று ஆரம்பித்து ஹிம்ஸை செய்கிறவன் கொடிய பாவத்தைச் செய்ததனாலேற்படும் ஆயுளது அழிவை அடைகிறான் என்று பிஜம்போட்டுக்கொண்டார். இதினால் மனதால்கூட பாபத்தை நினையாமலிருக்கவேண்டுமென்று ஏற்பட்டது. இதனபிப்பிராயமாகவே "அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று" என்றும் கூறினர், இதன் கருத்து வேள்வியைக்காட்டிலும் கொல்லாமை நன்று என்பதாம். வேள்வி நன்று அதைவிடக்கொல்லாமை மிகவும் நன்று என்பது ஆசிரியர் அபிப்பிராயம் என்று கூறி இதனால் வேள்வியில் கொல்லுதலிருக்கிறது. நற்கன்மமுமிருக்கிறது. ஆதல்பற்றியே கன்மாவை அனிஷ்டம் இஷ்டம் மிச்ரமென மூவகையாய் வகுத்தார். இனி யாகத்தை எந்த கன்மாவெனலாமென ஆசங்கித்து மிச்ரகர்மாவென்று சாஸ்திரியார் ஸித்தாந்தங்கொண்டார். இனி இவர் கூறுவதை முழுவதும் கூற என்மனம் நடுங்குகிறது. ஆயினும் முழுவதையும் கூறாவிடினும் முக்கியமான அவர் வசனத்தைக் கூறுகின்றேன்,

ஒரு கர்மாவானது அனர்த்தஹேதுவாயும் அர்த்தஹேதுவாயும் இருக்கலாமாம். எப்படியெனில் பரஸ்திரீகமனமானது அனர்த்தஹேதுவாகவும் அர்த்தஹேதுவாகவுமாவதுபோல் இவைகள் இரண்டிற்கும் விரோதமே இல்லையென்கிறார். இந்த திருஷ்டாந்தம் இந்த இடத்தில் நியாயமாகுமா பாருங்கள். இதை விரிக்கிற் பெருகுமென்று இதை விடுகிறேன். இந்த உதாரணத்தைக்கூறி "ஒரு பிராணியையும் கொல்லக்கூடாது" என்ற சாமான்ய விதியை "யாகத்தில் பசுவை ஹிம்ஸிக்கலா"மென்ற விசேஷவிதி சங்கோசம் செய்யாதாம். விசேஷவிதியாலேற்படும் பாபம் அதன்பலனைத்தான் கொடுக்குமாம். ஸாமான்யவிதியாலேற்படும் புண்யகர்மபலன் அதன்படி நிற்குமாம். இப்படி இவர் கூறினால் சாமான்ய விதி விசேஷ விதியென்று சாஸ்திரகாரர்கள் கூறிக்கொண்டு விசேஷ

விதி ஸாமான்யவிதியை ஸங்கோசப்படுத்துமென்றுகூறுகின்றனர். அவ்வபிப்பிராயத்தை இவர்ஒப்பமாட்டாரோ? அவ்விதமாயின் இவரது வ்யாகரணசாஸ்திரம் இவரிடம்எவ்விதம் நிலைபெறும். இவ்விதமெல்லாம் கூறியபிறகு "यज्ञानां जपयज्ञोस्मि" யக்ஞங்களுக்குள் ஜப யக்ஞமாகவிருக்கிறேனென்று கீதாசார்யர் கூறினதில் மற்ற யக்ஞம் ஹிம்ஸை என்ற பாபகர்மத்தோடுகூடியதாம். அதனுல் அதைக்காட்டிலும் மேலானது இது என்று காட்டதான் கூறினராம். இனி நம் சாஸ்திரியார் "मासानां मार्गशीर्षोहं" மாதங்களுள் மார்கழியாகின்றேன் என்றதால் மார்கழியே விவாஹத்திற்கெடுத்ததென்றும்கூறுவார்போலும். பிறகு,

"स्वधर्ममपि चावेक्ष्य नविकंपितुमर्हसि"

யுத்தத்தில் அனேகர்களை மாய்க்கவேண்டியிருக்கிறதே என்று அர்ஜுனன் மயங்கும்போது ஹிம்ஸையைப்பற்றி கவனியாதே. என்னை ஆச்ரயித்தவனுய்க்கொண்டு தவத்தால் அப்பாபத்தைப் போக்கடிப்பாய் என்று பகவான் உபதேசிப்பதால் விஹிதமான யுத்தத்தில் எப்படிப்பாபமோ அப்படியே விஹிதமான யாகத்தில் பாபம் உண்டென்பதேயாகுமென்று கூறுகின்றுர். இங்கு பார்ப்போம். இங்கு அர்சுனன் முதல் அத்தியாயத்தில் சோகமோஹத்தையடைந்தவனுய் ஸ்வதர்மத்தை அதர்மமென்றும் பாதர்மத்தை தர்மமென்றும் எண்ணிப்புலம்ப ஆரம்பித்தான். அதைக்காட்டுவதற்காகவே,

अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे ।
गतानसूगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः ॥

'துக்கிக்கத்தகாதவர்களைக்குறித்து துக்கிக்கிறுய். பெரியோர்போல் பேசுகிறுய். பண்டிதர்கள் இறந்தவர்களைக்குறித்தும் இறக்காதவர்களைக்குறித்தும் துக்கிக்கமாட்டார்களென்று ஆரம்பித்தார். 'पापमेवाश्रयेदस्मान्' என்று அர்ஜுனன் சொன்னது ஸ்வபுத்தி வசனமல்ல. சோகமோஹங்களால்ஏற்பட்டதென்றே சித்தாந்தம். ஆகவே பிக்ஷாசரணம் முதலியவை பிறதர்மம். யுத்தம் ஸ்வதர்மம். "स्वधर्ममपि चावेक्ष्य नविकंपितुमर्हसि" என்றுர்.

श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात् स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

ஸ்வதர்மம் குணமற்றதாயினும் அதுதான் மேலானது. அதுவே ச்ரேயஸ்ஸைக்கொடுக்கும். பிறரது தர்மம் பயத்தைக்கொடுக்கும். என்று தான் உபதேசித்தாரே தவிற, இந்த பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்யலாமென்று சொல்லவே இல்லை. இது எப்படியாயினுமிருக்கட்டும். சாஸ்திரியாரின் மேல்வசனத்தைக்கவனிப்பாம். நூறு அசுவமேதயாகம் செய்து இந்திரபதவியை அடைந்தும் இந்திரனுக்கு ராவணாதிகளால் துக்கமேற்பட்டதென்று புராணம் கூறுவதைப்பார்த்தால் யாகத்தின் ஹிம்ஸையின் பயன்தானென்று சொல்ல சரியான யுக்தியாகிறதாம். இந்த யுக்தி இதற்கு ஒட்டட்டும். பிர்மா விஷ்ணு, சிவன் இவர்கள் எத்துணையாகம் செய்து அப்பதவியை அடைந்தனர். அவர்களுக்கும் இடுக்கண் தோன்றினவென்றும் புராணம் கூறுகின்றதே. அதற்கும் சாஸ்திரியார் சமாதானம் எழுதாமல் விட்டுவிட்டார். இவ்விதமிவர் சொல்வதற்கு மஞ்ஜூஷாகாரர் விஸ்தாரமாய் எழுதியிருப்பதை வையாகரணரானதால் நம்பிக் கூறுகிறார்போலும். வ்யாகரண சாஸ்திரக்காரரது வசனம் அபசப்தம் ஸுசப்தம் கூறுமிடத்தில் தான் பிரமாணமே தவிற வேதசாஸ்திரவிருத்தமாய்ச் சொல்வதிலும் பிரமாணம்தான் என்று நம்பிவிட்டார். பிறகு யாகம் அபூர்வவிதியல்லவாம். அப்படியிருந்தால் எல்லோருக்கும் யாகம் விதிக்கப்பட்டதாகுமாம். ஆகையால் மாமிசம் சாப்பிடுவதில் ஆசையுள்ள தாமஸ அதிகாரிகளுக்கே யாகம் விகிதமாகும். மாமிசம் சாப்பிடுவதில் ஆசை ஏற்பட்டால் யாகத்தைச் செய்து புஜி. நீ ஸ்வதர்மமாகப் புஜிக்காதே என்று பரிஸங்கியை செய்வதுதான் சாஸ்திரதாத்பரியம். ஆகையால் ஸாத்விகப் பிராமணர்களுக்கு அது ஏற்பதில்லை என்கிறார். இங்கு ஒன்று கேட்போம். அபூர்வ விதியானால் எல்லோருக்கும் விதிக்கப்பட்டதாகும் என்றவிடத்தில் எல்லோரும் என்றால் யார் எல்லாமனிதர்களுக்குமா? அல்லது ஏதாவது குறிப்பிட்ட ஜாதியாருக்கா? முதல் கக்ஷி ஆனால் எல்லோரும் யாகம் செய்யலாமோ. இரண்டாவதானால் கஷ்டமென்ன? இனி பரிஸங்கியாவிதியென்று ஒப்புக்கொண்டதால் இந்த கஷ்டம் விலகிவிட்டதோ பார்ப்போம். மாமிசம் சாப்பிடும் இஷ்டம் ஏற்பட்டால் எல்லா மனிதரும் யாகம் செய்துதான் சாப்பிடவேண்டும் என்று பரிசங்கியை செய்வது அது செய்யாமல் புசிக்கும் 4வது வர்ணத்தார் சண்டாளாதிகள் இவர்களுக்குப் பாபம் அதிகம் ஏற்படும். அதனால் அவர்களும் யாகம் செய்துதான் சாப்பிடவேண்டுமென்று

விதிக்கிறதா? அல்லது குறிப்பிட்ட ஜாதியாரில் மாமிசம் புசிக்க வேண்டுமானால் யாகம் செய்துதான் சாப்பிடவேண்டுமென்றால் க்ஷத்திரிய வைசியர்கள் யாகம் செய்வதைத் தவிர மற்ற காலங்களிலும் புசிக்கிறார்களே அது மஹாபாபமென்று கூறவந்ததா? அவ்விதமாயின் ஸ்ரீராமர் வனத்தில் மாமிசபோஜனம் செய்ததாகக் காண்கிறதே அது அவருக்குப்பாபம்தானென்று சாஸ்திரியார் கூற வேண்டும். அதைப் பெரியோர்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்களோ? இவ்விதமாக சாஸ்திரியார் தமது உபந்யாஸத்தை முடித்துவிட்டார். இனி தாமஸப் பிராமணர் என்றொரு வார்த்தை போட்டு அவர்களுக்கு யாகம் என்கிறார். அதற்குக் குறள் பிரமாணம் காட்டவில்லை.

இனி இதற்கு நான் பதிற்கூறவே முன்வரவே வேண்டாம். ஏனெனில் அன்று அக்கிராஸனம்வகித்த ஸ்ரீமான் பண்டிதரத்னம் ஸ்ரீ உ-வே திருநாராயண அய்யங்கார் ஸ்வாமிகளே சரிவரக் கூறிவிட்டார். அவர்கள் அழகாகக் கூறிய மொழிகளை இங்கு எழுதுகிறேன். புண்யகர்மம் பாபகர்மம் என்று கர்மம் இருவகைப்பட்டதென்றும், புண்யகர்மம் பாபகர்மமாகவாவது பாபகர்மம் புண்யகர்மமாகவாவது ஆவதில்லையென்றும் இவ்வாறு பரஸ்பரம் விருத்தமான கர்மாக்கள் ஒருபோதும் ஒன்றாகக் கருதமுடியாதாதலால் யாகத்தைப் புண்யகர்மம் என்றும் பாபகர்மமென்றும் சொல்லுதல் கூடாதென்றும், விகிதகர்மமானதால் புண்யகர்மாகத் தான் சொல்லவேண்டுமென்றும், "அவிசொரிந்தாயிரம் வேட்டலின்" என்னும் குறளால் யாகம் போற்றப்படுகிறதேயொழிய நிந்திக்கப்படவில்லையென்றும், விகிதமான தண்டனைகள் அரசர்களுக்குப் புண்யகர்மங்களாகவே ஆகிறபடியால் அதில் பாபமே இல்லையென்றும், இந்திராதிகளுக்கு போகமத்தியில் ராவணாதிகளாலேற்படும் விபத்துக்கு பசுஹிம்ஸை காரணமல்லவென்றும், ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவங்களாலாகிய விபத்துக்களென்றும், ஹிம்ஸை என்பது லௌகிகம் தான் பாபஜனகமென்றும், வேதோக்தமான ஹிம்ஸையே புண்யமாகவும் ஆகலாமென்றும், யாகம் புண்யகர்மமாகவே கருதப்படவேண்டுமென்றும். இந்த அழகான திருமொழிகளே சாஸ்திரியாருக்குப் போதுமானதாயினும் நானும் இதில் இறங்கியதால் இவ்வளவு கூறநேர்ந்தது.

(தொடரும்.) M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

முதலியவைகளுக்கும் அடக்கியாளும் அதிபதியாக இவ்விவாஹப்பெண் இருக்கவேண்டுமென்று ஆசாஸனம் பண்ணுகிறான். சிறுபெண்ணுக்கு இம்மந்திரத்தில் சொல்லியவைகளை யடக்கியாளும் ஸாமர்த்தியம் ஸம்பவிக்குமா? ஆதலால் இவையெல்லாவற்றையுமடக்கியாளும் ஸ்வாதந்திரியமுள்ளவளாகவே விவாஹகாலத்தில் அவளிருக்கவேண்டுமென்று புலப்படுகின்றதல்லவா?

8. அன்றியும், பதிக்கிருஹத்துக்கு, ரதத்திலேறிக்கொண்டு சென்றவுடன், அவ்விவாஹப்பெண்ணினுடைய மடியில் ஒரு குழந்தையை உட்காரும்படிசெய்து இக்குழந்தையின் கையில்பழவர்க்கங்களைக் கொடுத்துவிட்டு வரனை ஜபிக்கும்படி சொல்லப்பட்டிருக்கும் மந்திரத்தாலும் விவாஹப்பெண் யுவதியாகத்தானிருக்கவேண்டுமென்று புலப்படுகின்றது. அதாவது. "ஓ பழங்களே! நீங்கள் பிரஸவசிலங்களாக விருப்பதுபோல், இவளும் உங்களுடைய பிரஸாதத்தால் பிரஸவசீலையாக விருக்கவேண்டும். அப்படியே கிருஹகாரியங்களில் ஸமர்த்தையாகவும் இருக்கவேண்டும். அக்கினி, அதிதி, முதலியவர்களை சுச்ரூஷைபுரிவதில் வெகுஜாக்கிரதையாக விருக்கவேண்டும். என்சரீரஸம்பந்தத்தை வெகுகாலம் அனுபவிக்க வேண்டும். ஜீர்ணவயதில் புத்திரன் முதலியோருக்கு காரியாகாரியங்களை உபதேசிக்கவும் வேண்டு" மென்றிவ்வாறாக வரன் பிரார்த்தித்துக்கொள்வதெல்லாம் சிசுவாகவும், உபதேசத்தைக் கிருஹித்துக்கொள்வதற்கு ஸாமர்த்தியமில்லாதவளாகவுமிருக்கும் சிறுமியிடம் எப்படிச்சொல்லமுடியும்? ஆகவே இம்மந்திரார்த்தத்தை அறிந்து, அனுஷ்டிக்கக்கூடிய யுவதியாகவே அவளிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆகவே ருதுமதீ விவாஹம் தான் சாஸ்திரீயம்.

இதுவரையில் எடுத்துரைக்கப்பட்ட ருதுமதி விவாஹலிங்கங்களைக்காட்டிலும் அதிகமாகவும், "விவாஹதினம் முதற்கொண்டு மூன்று நாட்கள் பிரும்மசர்யத்துடன் தம்பதிகள் இருக்கவேண்டுமென்பதும், நான்காவது தினத்தில் ஸமாவேசன கர்மாவைச் செய்யவேண்டுமென்பதுமாகிய இவ்விரண்டு விதிகளையும் ருதுமதி விவாஹத்திற்கு ஸாதகங்களாக நினைத்துக்கொண்டு ச்ரௌதலிங்கங்களாகவே நவீனர்கள் பரிகணனமும் செய்திருக்கிறார்கள். ஆனால் இவ்விரு விதிகளை இவர்களபிப்பிராயப்படி ச்ரௌத லிங்

கங்களாகச் சொல்வதற்கிடமில்லை. இவ்விரண்டும் ஸூத்திரத்தி லிருப்பதால் ஸ்மார்த்த லிங்கமாக ஒப்பவேண்டுமேயொழிய, ச்ரௌத லிங்கங்களின் மத்தியில் இவ்விரண்டையும் அந்தர்ப்பா வம் பண்ணுவது அனவதானத்தையேதானறிவிக்கும். ஸ்மார்த்த லிங்கமாகிய இவ்விரு காரணத்தையும், பிறகு ஸ்மார்த்தலிங்க விசாரகாலத்தில் விஸ்தாரமாய் விசாரித்து நிராகரணம் செய்வாம். ஆகையால் விவாஹத்தில் விநியோகம் பண்ணப்பட்டிருக்கும் மந் திரங்களை அர்த்தவிசாரம் செய்யும்போது, விவாஹப்பெண் ருது மதியாக இருக்கவேண்டுமென்றுதான் ஏற்படுவதால் கீழ்க்கண்ட எட்டு மந்திரலிங்கங்களாலும் ருதுமதிவிவாஹம்சாஸ்திரீயமென்று ஸித்தம்.

இனி இவர்களினெட்டுவிதமாயிருக்கும் பூர்வபக்ஷத்திற்கும் ஸமாதானம் சொல்லத்தொடங்குவாம். மந்திரலிங்கங்களைக்கொ ண்டு ருதுமதீவிவாஹம்தான் சாஸ்திரீயமென்று வியவஸ்தாபனம் செய்யமுற்படும்'இந்நவீனர்களே தற்காகமந்திரலிங்கங்களை அவலம் பித்துக்கொண்டு ஸ்திரீகளின் விவாஹவயதை தீர்மானம் செய்வ தற்கு ஆக்கிரஹமடைகிறார்களென்று புரியவில்லை. விவாஹவயதை ஸ்திரீகளுக்கு ஸ்பஷ்டமாகக் கூறும் விதிவாக்கியங்களெல்லாமடி யோடு அற்றுவிட்டதா? விதிவாக்கியங்கள் யாதொன்றும் அகப் படாமலிருந்தாலல்லவா மந்திரலிங்கங்களை விவாஹவிஷயத்தில் பிரமாணமாகத் தேடிக்கண்டுபிடிக்கவேண்டும்? விவாஹவிஷயத் தில் ருதுவுக்கு முன்பே ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்விக்க வேண்டுமென்று ஸ்பஷ்டமாய் விதிவாக்யங்கள் பல்லாயிரமிருக் கின்றனவே. அவைகளைக்கொஞ்சங்கூட கவனிக்காமல் மந்திரலிங் கங்களை விவாஹவயோநிர்ணயத்துக்குப் பெரிய பிரமாணமாக எடுத்துரைப்பது அநியாயமேயாகும். மனுஸ்மிருதியில் "முப் பது வயதுள்ள புருஷன் பன்னிரண்டு வயதுபெண்ணை விவாகம் செய்துகொள்ளவேண்டும். அல்லது இருபத்திநான்கு வயதுள்ள புருஷன் எட்டுவயதுள்ள பெண்ணையும் கல்யாணம் செய்துகொ ள்ள வேண்டு"மென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸம்வர்த்த மகரிஷியோ "எது வரையில் கன்யகை வெட்கப்படுவதில்லையோ எதுவரை தெருப்புழுதியில் விளையாடுகிறாளோ பசு முதலிய பிரா ணிகள் எதிர்வரும்போது எதுவரையில் அதன் வழியிலேயேபயப்

படாமல் நிற்பாளோ அப்போதே கன்யகைக்கு விவாஹம் செய்ய வேண்டும்" என்று பகர்ந்தார். "ருதுகாலம் சேர்ந்துவிடுமோவென்ற பயத்தால் கன்யகைக்கு ருதுவுக்கு முந்தியே விவாஹம் செய்துவிட வேண்டும்"! என்று வஸிஷ்டமகரிஷியும், "பிதாமஹர் ஸ்திரீகளுக்கு விவாஹத்தையே உபநயனமாகச்சொல்லியிருப்பதால் கர்ப்பம் முதற்கொண்டு எட்டாவது வயதோ, அல்லது ஜனனம் முதல் எட்டாவது வயதோ விவாஹத்திற்கு சிரேஷ்டமாகுமென்று யமனும், "விவாகத்தை ஸ்திரீகளுக்கு உபனயனமாக மனு கூறியிருப்பதால் ஸ்திரீவிவாகத்திற்கு அவ்வுபனயனகாலமே தான் சிறந்ததாகுமென்று வியாக்ரபாதரும், மற்றுமுள்ள மகரிஷிகளும் எட்டு வயதுக்குமேல் ருதுவுக்கு முந்தியிருக்கும் வயதையே ஸ்திரீவிவாக காலமாக ஸ்பஷ்டமாயும், ஸம்சயம் சிறிதுமில்லாமலும், விதித்திருக்குங்காலத்தில் மந்திரலிங்கங்களை விவாஹ விஷயத்திலெதற்காகத் தேடவேண்டுமோ ? பிரத்தியக்ஷ விதிவாக்கியத்தால் வெளியாகும் அர்த்தத்திற்கு விரோதமாக வேறொரு அர்த்தத்தை பிரத்தியக்ஷ விதிவாக்யத்திற்குப் பிறகு அதை அனுசரித்து பிரவர்த்திக்கும் லிங்கங்களால் அனுமானம் செய்வதற்கு ஆயாஸப்படுவது அயுக்தமன்றோ: பிரத்யக்ஷமாய் தந்தம், தும்பிக்கை முதலியவைகளுடன் யானை எதிரில்பிரகாசிக்கும்போது அதை பின் தொடர்ந்து செல்லும் யானைப்பாகனை லிங்கமாக அமைத்துக்கொண்டு இது யானையல்ல குதிரைதானிது என்று அனுமானம் செய்பவர்களை புத்தியுள்ளவர்களாகக் கருதமுடியுமா ? ஆகவே விதிவாக்கியத்தால் வெளியாகும் அர்த்தத்திற்குவிரோதமாக லிங்கங்களால் மற்றொரு அர்த்தத்தைக் கல்பிப்பதற்குச் சிறிதும் அவகாசமில்லை.

இவ்விடத்தில் நவீனர்களின் பூர்வபக்ஷமாவது — ருதுவுக்கு முந்தியே ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்பதற்கு பிரத்யக்ஷ விதிவசனங்களிருப்பதாக தாங்கள் எடுத்துரைத்தது உண்மைதான் ? சுருதிகளில் இவ்வளவு வயதில் ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டும் என்றுப் பிரத்தியக்ஷ விதிவாக்கியம் யாதொன்றும் காணவில்லை. தாங்களுமிதுவரையில் எடுத்துக் காட்டவுமில்லை. தாங்கள் இதுவரையில் எடுத்துக்காட்டிய பாலிகாவிவாஹஸாதகமாயிருக்கும் விதிவாக்கியங்கள் அனைத்தும்

ஸ்மிருதிகளிலல்லவா காணப்படுகின்றன? நாங்களிதுகாறும்எடுத்துக்காட்டிய ருதுமதீவிவாஹஸாதகமாயிருக்கும் லிங்கங்களோ சுருதிகளிலேயே வெகு ஸ்பஷ்டமாய் காணப்படுகின்றனவே? ஆகவே ருதுமதீவிவாஹந்தான் சாஸ்திரீயமாகும். பிரத்யக்ஷமாக பாலிகாவிவாஹத்தை விதிக்கும் ஸ்மிருதிவசனங்களை தள்ளிவிட்டு லிங்கங்களால் ருதுமதீ விவாஹத்தை சாஸ்திரீயம் என்று கீழ்கண்டபடி ஸ்தாபிப்பதற்கு வெகு பாடுபடும் தங்களுக்கு ஸ்மிருதிகளெல்லாமே அப்பிரமாணமென்றபிப்பிராயமா? என்றால் ஸ்மிருதி வசனங்களெல்லாம் பிரமாணமில்லையென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் சுருதிகளைப்போல் ஸ்மிருதிகளுக்கு பிராமாண்யமில்லை என்றுதான் நாங்கள் கூறுகிறோம். ஸ்மார்த்த(ஸ்மிருதிகளிலிருக்கும்) விதிவாக்யங்களுக்கு ஸ்மார்த்தவிதியால் அனுமிதமாயிருக்கும் சுருதிமூலமாகவே பிராமாண்யமே ஒழிய ஸ்வதந்திரமாக பிராமாண்யமில்லையென்பது போலவே ச்ரௌதலிங்கங்களுக்கும் அந்த லிங்கங்களையனுசரித்து ஒரு சுருதியைக் கல்பித்துக்கொண்டு தான் பிராமாண்யமே ஒழிய ஸ்வதந்திரமாகயில்லை. ஸ்மார்த்த விதிவாக்யத்திற்கும் மந்திரலிங்கங்களுக்கும் சுருதிகல்பனமூலமாகவேதான் பிராமாண்யமென்பது ஸமானமாகும். ஆகவே ஸ்மார்த்த விதியால் ஊஹிக்கப்பட்ட விதிவாக்யமொன்று, மந்திரலிங்கங்களால் கற்பிக்கப்பட்ட விதிவாக்யம் மற்றொன்றென்று ச்ரௌதவிதி இரண்டுவிதமாக ஸித்தித்தது, இவ்விரண்டு விதிகளுக்குள் நாங்கள் ச்ரௌதலிங்கானுமிதமாயிருக்கும் விதிவாக்யத்தை அவலம்பித்துக்கொண்டு அர்த்தவியவஸ்தை செய்கிறோம். இதில் என்ன தவறுதல்? அல்லது ஸ்மார்த்த விதியை அனுசரித்திருக்கும் ச்ரௌதவிதியைக் காட்டிலும் ச்ரௌதலிங்கானுஸாரியாக இருக்கும் ச்ரௌத விதிக்குப் பிராமாண்யமதிகமானதால் ச்ரௌதலிங்கானுசாரியாய் இருக்கும் விதியைப் பிரமாணமாக அங்கீகரித்து விவாஹம் முதலிய காரியங்களை அனுஷ்டிப்பது உசிதந்தானே? ஸ்மிருதிகளை இயற்றிய மகரிஷிகள் அனைவரும் தன் தன் காலத்திலிருக்கும் ஆசாரத்திற்குத்தகுந்தபடி எல்லாம் ஏதாவதொரு விஷயத்தை சுருதிவிருத்தமாகவும் நிரூபணம் செய்துவிடலாமன்றோ! எக்காலத்திலும் ஏகவிதமாகவும் நித்தியமாகவும் இருக்கும் சுருதிகள் அவ்விதம் காலவிசேஷத்தில் நடக்கும் காரியங்களை நிரூபணம் செய்வதில்லையாதலால் முக்

க்ரலத்திலும் ஒரேவிதமாய் அர்த்தத்தை அறிவிக்கும் வேதவிதியால் வெளியாகும் அர்த்தந்தான் அனுஷ்டானத்திற்கு அனுகூலமாகும். ஆகவே ச்ரௌதலிங்கானுஸாரியாயிருக்கும் விதிவாக்யந்தான் முக்யப்ரமாணமேயன்றி ஸ்மார்த்தவிதியை அனுஸரித்திருக்கும் விதிவாக்யம் துர்பலப்பிரமாணமென்பதில் ஐயமில்லை. ஆனால் ஸ்மார்த்த விதிவாக்கியங்களுக்கு கதியென்னவென்றால் இப்படி விசாரம் செய்யச் சக்தியில்லாமல் சிரத்தர்ஜடர்களாகவிருக்கும் வைதிகர்கள்தான் கதி என்று அறிக. அல்லது அப்பிரமாணமென்றுவது அவ்விதி வாக்யங்களை விலக்கிவிடவேண்டும். இந்த ரகஸ்யங்களை உணர்ந்துகொண்டு தான் நாங்களும் விவாஹவிஷயத்தில் ஸ்மார்த்த விதிகளை விசாரிக்காமல் மந்திரலிங்கங்களை விசாரித்து ருதுமதீவிவாஹந்தான் சாஸ்திரீயமென்று நிர்ணயம் செய்தோம். ஸ்மார்த்த விதிகளிலிருப்பது எங்களுக்குத் தெரியாதது இல்லை என்று.

இதற்கு உத்தரங்கூறுவாம். அஹோ? தங்களுடைய சாஸ்திரார்த்த பாண்டித்யமும் பிரமாணவியவஸ்தை செய்யும் பிரகாரவிசேஷமும் மிகவும் அத்புதமாகவும் அபூர்வமாகவும் இருக்கின்றது. பூர்வமீமாம்ஸகரொருவருங் கூட தங்களைப்போல் சொல்லவில்லை. இப்படிப் பிரமாணவியவஸ்தை செய்வதிலுங்கூட நவீனர்களின் ஸம்பிரதாயம் நவீனமாகவே இருக்கின்றது. ஏனென்றால் பூர்வமீமாம்ஸா சாஸ்திரநிபுணர்கள் யாவரும் விதி சேஷமாகவிருக்கும், மந்திரம், அர்த்தவாதம் இவ்விரண்டிற்கும் விதிவாக்யத்துடன் ஏகவாக்கியதை ஏற்பட்ட பின்புதான் ஸ்துதிரூபார்த்தத்தையறிவிக்கும் ஸாமர்த்தியம் உண்டாகுமேயன்றி, விதிவாக்கியத்துடன் ஏகவாக்கியதை செய்வதற்கு முந்தி ஒரு அர்த்தத்தையும் அறிவிக்கும் சக்திகிடையாதென்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். உத்தரமீமாம்ஸா நிபுணர்கள் மந்திரார்த்த வாதங்களுக்கு விதிவாக்கியத்துடனே ஏகவாக்யதை ஏற்படுவதற்கு முன்பு ஸ்வதந்திரமாக ஒரு அர்த்தத்தையறிவிக்கும் ஸாமர்த்தியமில்லை என்ற பூர்வமீமாம்ஸக ஸித்தாந்தத்தையே பின்பற்றினவர்களாக இருந்தாலும், விதிவாக்யத்துடனே ஏகவாக்யதையை அடைந்த மந்திரார்த்தவாதங்களுக்கும் விதிவாக்யார்த்தத்தைஸ்துதிசெய்வதில்பரமதாத்பர்யமிருந்தபோதிலும், மற்றொரு அர்த்த விசேஷத்திலும் அவாந்தர தாத்பரியமுண்டு என்று ஒப்புக்கொண்டு மந்திரார்த்த வாதங்களி

ன்றும் சப்த சக்தி விசேஷமஹிமையால் ஸ்வதந்திரமாக வெளியாகும் அர்த்த விசேஷத்தை அறிவிப்பதிலும் அவைகளுக்குப் பிராமாண்யம் உண்டென்று தேவதாதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் எல்லா மந்திரார்த்த வாதங்களுக்கும் அவர்கள் ஸ்வதந்த்ரமாக வெளியாகும் அர்த்தவிசேஷத்தில் அவாந்தர தாத்பர்யமுண்டென்று சொல்வதில்லை. ஆனால் எந்த மந்திரார்த்த வாதங்களினின்றும் சப்தசக்தியால் பிரகாசிக்கும் அர்த்த விசேஷத்தை அங்கீகரிக்கும் விஷயத்தில் பிரத்யக்ஷம் முதலிய லௌகிகப்பிரமாணங்களுக்கு பிரவிருத்தியும் விரோதமுமில்லையோ அப்படிப்பட்ட மந்திரார்த்தவாதங்களுக்குத்தான் சப்தசக்தியால் தோன்றும் அர்த்த விசேஷத்திலும் அவாந்தர தாத்பர்யமுண்டென்றுதான் இவ்வதிகரண ஸித்தாந்தமே தவிர பிரத்யக்ஷம் முதலிய லௌகிகப்பிரமாணங்களும் பிரவர்த்திக்கக் கூடியதாயும், அவைகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாயுமுள்ள மந்திரார்த்த வாதத்திலும் அவாந்தர தாத்பர்யமுண்டென்று அவ்வதிகரண ஸித்தாந்தமில்லை.

ஆகவே தேவதாதிகரண ஸித்தாந்தப்பிரகாரமாகவும் மந்திரார்த்த வாதங்களுக்குப் பிரத்தியக்ஷம் முதலிய லௌகிகப்ரமாணங்களுக்கு விருத்தமாயிருக்கும் அர்த்தத்தையே அறிவிப்பதற்கு ஸாமர்த்தியமில்லையென்று ஏற்படுமானால் யாவராலும் முக்கியப்ரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ஸ்மார்த்த விதிவாக்யம் என்ற சப்தப்ராமாணத்திற்கு விருத்தமாயிருக்கும் அர்த்தத்தை ஸூசனை செய்வதற்கும் ஸாமர்த்தியமில்லையென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே சுருதிகளைப்போல் ஸ்மிருதிகளுக்கு அவ்வளவு பிரமாணமில்லையென்று சொல்லிக்கொண்டு ச்ரௌதமாயிருக்கும் மந்திரலிங்கமூலமாக ருதுமதீ விவாஹஸாதகமாய் இருக்கும் விதிவாக்கியத்தை கல்பனை செய்துவிடுகிறோம் என்று சொல்வதற்கு நியாயமில்லை. ஏனென்றால் பிரத்தியக்ஷம் முதலிய லௌகிக பிரமாணங்களைக் காட்டிலுமே விதிவாக்யார்த்தத்தில் தாத்பர்யமுள்ள மந்திரார்த்த வாதங்கள் துர்பலப்ரமாணமென்று மீமாம்ஸக ஸித்தாந்தமானால் தமது சொந்த அர்த்தத்தில் தாத்பர்யமுள்ளதும் விவாதமின்றி பிரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டதுமாகிய ஸ்மார்த்த விதிவாக்யங்களைக் காட்டிலும் அவைகள் துர்பலந்தானென்பது சொல்லாமலே விளங்குமல்லவா? அங்ஙன

மாயின் பிரபலப்ரமாணமாகியஸ்மார்த்தவிதிவாக்கியார்த்தத்திற்கு விருத்தமான ஒரு அர்த்த விசேஷத்தில் ஸ்மார்த்தவிதிவாக்கியத்தைக் காட்டிலும் துர்பலப்ரமாணமாகிய மந்திரலிங்கங்களுக்கு தாத்பர்யமிருப்பதாக எப்படிச் சொல்லமுடியும்? ஆகவே ஸ்மார்த்த விதிவாக்கியங்களைக் காட்டிலும் ச்ரௌதலிங்கங்களுக்கு பிராபல்யம் அதிகமில்லையென்று பூர்வமீமாம்ஸகர்களுடைய ஸித்தாந்தத்திற்கு விருத்தமாயிருக்கும் தங்களுடைய வாக்கியார்த்தவிசார ஸம்பிரதாயம் வெகு அபூர்வமென்பதில் ஸம்சயமும் உண்டோ?

அன்றியும் அர்த்த விசேஷத்தை அறிவிக்கும் பிரமாணமானது சுருதியென்ற காரணத்தாலேயே அவையனைத்துமே பிரபல பிரமாணமென்றும் ஸ்மிருதி என்ற காரணத்தால் அவையனைத்தும் துர்பலப்பிராமாணமென்றும்ஜைமினீயஸித்தாந்தமில்லை. சுருதியோ, ஸ்மிருதியோ எந்தப்ரமாணமாயிருந்தாலும் எந்தப்ரமாணத்துக்கு அதனர்த்தத்துடன் ஸம்பந்தம் வெகு ஸமீபத்திலிருக்குமோ அந்தப்பிரமாணமே பிரபலமென்றும், எந்தப்பிரமாணத்திற்குஅர்த்தத்துடன் ஸம்பந்தம் வெகு தூரத்திலிருக்குமோ அது துர்பலமென்றுந்தான் அவர்களின் ஸித்தாந்தம். பிரமாணங்களெல்லாம் பிரமேயத்தை (அர்த்தத்தை) ஸம்பந்த மூலமாகவே அறிவிக்கவேண்டும். அந்த ஸம்பந்தமோ அனேகவிதம். சிலவிடங்களில் நேராகவே ப்ரமாணம் பிரமேயமிவ்விரண்டிற்கும் ஸம்பந்தமிருக்கும். சிலவிடங்களிலோவென்றால் அவ்விரண்டிற்கும் பரஸ்பரமுள்ள ஸம்பந்தம் பரம்பரையாகவும் உண்டு. இவ்விரண்டையும் ஸன்னிகர்ஷம், விப்ரகர்ஷம் என்றும் சொல்வது மீமாம்ஸா ஸம்பிரதாயமுண்டு. இவ்விரண்டுகளில் பேதத்தைக்கொண்டே பிரமேயத்தையறிவிக்கும் பிரமாணங்களுக்குள்ளும் அனேகபேதம் மேற்பட்டுவிட்டது. அப்படியே பலாபலபேதமும் ஸித்தித்துவிட்டது. இவ்வாறு பேதப்பட்டிருக்கும் பிரமாணங்களும் சுருதி லிங்கம், வாக்கியம், பிரகரணம், ஸ்தானம், ஸமாக்யை, என்ற பேதத்தால் ஆறுவிதமாக பாகுபாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தை ஜைமினிபகவானும், மீமாம்ஸாதரிசனம் மூன்றாம் அத்தியாயம்மூன்றாம்பாதம்,பதினான்காவதுஸூத்திரத்தில்இவ்வாறே பிரமாணபலாபல வியவஸ்தையை ஸித்தாந்தம் செய்திருக்கின்றார்.

இந்த ஸூத்திரத்திலிருக்கும் சுருதி என்ற பதத்திற்கு வேதமென்று பொருளல்ல. பின்னை பிரமாணாந்தரத்தை யபேக்ஷிக்காமல் யாதானுமொரு அர்த்தத்தையறிவிக்கும் விநிசப்தமென்றுதான் பொருள். அர்த்தத்தையறிவிப்பதில் வேறு பிரமாணங்களை அபேக்ஷிக்காமல் இருப்பதால்தான் சுருதிப்பிரமாணத்தை லிங்கம் முதலிய மற்ற ஐவகைப்பிரமாணங்களைக்காட்டிலும் அதிக ஸன்னிகர்ஷமுள்ளதென்றும் ஸ்வத:பிரமாணமென்றும் புகழ்வது வழக்கம். அவ்விநிசப்தமானது சுருதியிலிருந்தாலும் ஸரி, அல்லது ஸ்மிருதியிலிருந்தாலும் ஸரி, லிங்கம் முதலிய பிரமாணங்களைக் காட்டிலும் பிரபலமேயாகும். ஏனென்றால் பிரமாணபலாபல வியவஸ்தையைக்கூறுமிச் சூத்திரத்தில் சுருதி என்ற பொதுப் பதமே பிரயோகிக்கப்பட்டிருப்பதால்வைதிகசுருதிக்கும்ஸ்மார்த்த சுருதிக்கும் பேதமில்லையென்பது புலப்படுகின்றதல்லவா? லிங்கம் முதலிய மற்றுமுள்ள ஐவகைப்பிரமாணங்களோவென்றால் லிங்கம் சுருதியைக் கல்பித்துக்கொண்டும் வாக்கியம் சுருதி லிங்கம் இரண்டைக் கற்பித்துக்கொண்டும் பிரகரணப்பிரமாணம் வாக்கியம், லிங்கம், சுருதி இவைகளைக் கல்பித்துக்கொண்டும், ஸ்தானமென்பது பிரகரணம் முதலிய நான்கைக் கற்பித்துக்கொண்டும், ஸமாக்யையானது மற்ற ஐந்தையும் கிரமமாகக் கற்பித்துக்கொண்டுந்தான் பிரமேயத்தையறிவிக்குமாதலால் சுருதிப்பிரமாணத்தைக்காட்டிலும் அவை துர்பலப்பிரமாணங்களேயாகும். அதிலும் சுருதிலிங்கம் ஸ்மிருதிலிங்கமென்ற வித்தியாஸமில்லை. ச்ரௌதலிங்கமாயிருந்தாலும் ஸரி, ஸ்மார்த்தலிங்கமாயிருந்தாலும் ஸரி, சுருதியைக்காட்டிலும் துர்பலந்தான். ஸ்மார்த்தசுருதியோ அல்லது வைதிகசுருதியோ, சுருதிப்பிரமாணமெல்லாவற்றிற்குமே ச்ரௌதலிங்கமோ ஸ்மார்த்தலிங்கமோ இவ்விருலிங்கப்பிரமாணத்தைக்காட்டிலும் பிராமாண்யமதிகமுண்டு. ஆகவே பிரமேயத்தையறிவிப்பதில் விப்ரகர்ஷமதிகமுள்ளதும் அதனாலேயே துர்பலமாயுமிருக்கும் மந்திரலிங்கங்களைக் காட்டிலும் அர்த்தத்தையறிவிப்பதில் அதிக ஸன்னிகர்ஷமுள்ளதும், ஸ்மிருதஸித்தமாயுமிருக்கும் சுருதிக்கு பிராமாண்யமதிகமானதால் ஸ்மார்த்தசுருதிகளுக்கு விரோதமாக மந்திரலிங்கங்களால் ஒரு அர்த்தவிசேஷத்தைக் கல்பனை செய்வது பூர்வமீமாம்ஸா நியாயவிருத்தமாமன்றோ? மந்திரலிங்கங்களைக்காட்டிலும்ஸ்மார்த்தச்சுருதியானது பிரபலப்பிரமாண